ஆகாசவாணி செய்திகள் வாசிப்பவர் ராஜாராம்
உதவி லட்சுமணக் குமார்
27-11-10 சனிக்கிழமை
பகல் செய்தி அறிக்கை - மணி 1240 - 1250

தலைப்பு செய்திகள்;

1. ஆந்திரப் பிரதேசத்தின் அமைச்சரவை பற்றி திருமதி சோனியா காந்தியுடன் ஆலோசனை கலப்பதற்காக புதிய முதலமைச்சர் திரு கிரண்குமார் ரெட்டி புதுதில்லிக்கு வ்ந்திருக்கிறார்.
2. பிகார் மாநிலத்தில் அமைச்சர்களுக்கு இலாகாப் பொறுப்புக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.
3. இடதுசாரித் தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்ட 60 மாவட்டங்களின் வளர்ச்சிக்காக சிறப்புத் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவையின் பொருளாதார அலுவல்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
4. நமது நாட்டின் 20 ஆவது அணுமின்சார ஆலை கர்நாடக மாநிலம் கைகாவில் இன்று காலை முதல் இயங்கத் தொடங்கியது.
5. நாகர்கோவில்- மங்களூர் எரநாடு எக்ஸ்பிரஸ் தினமும் ஓடத் தொடங்கும் என்று ரயில்வே இணையமைச்சர் அறிவித்துள்ளார்.

இனி விரிவான செய்திகள்

SRILANKA- KRISHNA

இலங்கையில் 4 நாள் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள வெளியுறவு அமைச்சர் திரு எஸ் எம் கிருஷ்ணா இன்று யாழ்ப்பாணம் செல்கிறார். தமிழ் மக்களின் பண்பாட்டுத் தலைநகர் என்று கருதப்படும் யாழ்ப்பாணத்துக்கு இந்திய வெளியுறவு அமைச்சர் ஒருவர் கடந்த 20 ஆண்டுகளில் செல்வது இதுவே முதல்தடவை.போரினால் குடிபெயர்ந்த தமிழர்களுக்கு இந்தியாவின் சார்பில் 500 டிராக்டர்களை திரு கிருஷ்ணா வழங்குவார். தவிரவும், இந்தியாவின் உதவியுடன் தமிழர்களுக்கு ஆயிரம் வீடுகளைக் கட்டும் முன்னோடித் திட்டத்திற்காக அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியிலும் அவர் கலந்துகொள்வார். இலங்கை நாட்டின் வடக்கு ரயில்வே பாதை கட்டுமானப் பணித்திட்டத்தையும் திரு கிருஷ்ணா தொடக்கி வைப்பார்.இதற்காக இந்தியா 416 மில்லியன் டாலர் கடனை இலங்கைக்கு வழங்கும். இதற்கான உடன்படிக்கையில் நேற்று இலங்கை அதிபர் மகிந்தா ராஜபக்சா முன்னிலையில் இந்தியாவும் இலங்கையும் கையெழுத்திட்டன.

NITISH CABINET:

பிஹார் மாநில முதலமைச்சராக நேற்று பதவியேற்ற ஐக்கிய ஜனதா தளத்தின் திரு நிதிஷ் குமார், தமது அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள 29 அமைச்சர்களுக்கும் இலாகாப் பொறுப்புக்களை ஒதுக்கியுள்ளார். உள்துறை, பொது நிர்வாகம், அமைச்சரவை ஒருங்கிணைப்பு ஆகிய துறைகளை அவர் தம்மிடமே வைத்துக்கொண்டார். துணை முதலமைச்சர் திரு சுசீல் குமார் மோடிக்கு நிதித்துறையும்,, வர்த்தக வரித்துறையும், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையும், அளிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய ஜனதா தளத்தை சேர்ந்த திரு விஜய் குமார் சவுத்ரிக்கு நீர்வளத்துறையும், திரு பிஜேந்தர பிரசாத் யாதவுக்கு மின் துறை

வழங்கப்பட்டுள்ளது. பாரதீய ஜனதா கட்சியின் திரு நந்து கிஷோருக்கு சாலை கட்டுமாணத்துறை ஓதுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 28 ஆண்டுகளாக அமைச்சராக இருந்துவரும் சத்யதேவ் நாராயண் ஆர்யா சுரங்கத்துறை பெறுகிறார். முன்னாள் அரசுத் தலைமை வழக்குரைஞர் பி கே சாஹி இந்தத் தேர்தலில் போட்டியிடாவிட்டாலும் அவரும் அமைச்சராக்கப்பட்டுள்ளார்.

NUCLEAR

நமது நாட்டின் 20 ஆவது அணுமின்சார ஆலை இன்று கர்நாடக மாநிலம் கைகாவில் இயங்கத்தொடங்கியது. இந்த ஆலையின் உற்பத்தித் திறன் 220 மெகாவாட்டாகும். இந்த ஆலை இன்று காலை எட்டு மணி ஏழு நிமிடங்களுக்கு உற்பத்தியைத் தொடங்கியது. உலகில் 20 அல்லது அதற்கு மேற்பட்ட அணு மின்சார ஆலைகளைக் கொண்டுள்ள ஆறாவது நாடாக இந்தியா ஆகியிருக்கிறது. இந்த கைகா அணுமின் ஆலை இயங்கத் தொடங்கியதை அணுவாற்றல் ஆணையத்தின் தலைவர் திரு ஸ்ரீகுமார் பானர்ஜி கைகாவில் அறிவித்தார். 4 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இந்த ஆலை எரிபொருள் கிடைக்காததால் இயங்க முடியாமல் இருந்து வந்தது. இப்போது இந்த ஆலை இயங்கத் தொடங்கியதால், நமது நாட்டின் மொத்த அணுமின் உற்பத்தித் திறன் 4780 மெகாவாட்டாக உயரும்.

<u>PM – DAM :</u>

அருணாபிரதேஷில், 2000 மெகாவாட் Subansiri நீர்மின் திட்டத்தின் நடவடிக்கைகள் நடைபெற்று வரும் நிலையில், அத்திட்டத்தின் தொழில்நுட்ப தேவைகளை ஆராய, வல்லுனர் குழு ஒன்றை, மத்திய அரசு, விரைவில் அமைக்க உள்ளது.
புது தில்லியில், நேற்று, பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கை சந்தித்த அஸ்ஸாம் முதலமைச்சர் திரு. Tarun Gogoiவிடம், இது குறித்து பிரதமர் உறுதி அளித்தார். அஸ்ஸாமின் கீழ்பகுதிகளில் வசிக்கும் பல்வேறு குழுக்கள் இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

CABINET

இடதுசாரி தீவிரவாத்தால் பாதிக்கப் பட்டிருக்கும் 9 மாநிலங்களில் இருக்கும் 60 மாவட்டங்களுக்கான சிறப்பு திட்டம் ஒன்றிற்கு, மத்திய அமைச்சரவையின் பொருளாதார அலுவல்கள் குழு, ஒப்புதல் அளித்துள்ளது. இதைத் தெரிவித்த உள்துறை அமைச்சர் திரு ப. சிதம்பரம், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 25 கோடி ரூபாய், இந்த நிதியாண்டில் ஒதுக்கப்படும் என்றும், அடுத்த ஆண்டு 30 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்றும் கூறினார். மாவட்ட ஆட்சியர் தலைமையிலான 3 உறுப்பினர் கொண்ட குழுவிற்கு, இந்த நிதி அளிக்கப்படும் என்றும் அவர் சொன்னார். இந்த திட்டங்களை, மாவட்டத்தின் இதர அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்த பிறகு, குழு அனுமதி கொடுக்கும். சாலைகளைப் போடுவது, பஞ்சாயத்து அலுவலகங்களைக் கட்டுவது, ஆங்கன்வாடிகள், நீர் ஆதாரங்கள், குடிநீர் திட்டங்கள் ஆகிய பணி திட்டங்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். 25 சதவிகிதத்திற்கும் அதிகமாக பழங்குடி மக்கள் இருப்பதை கணக்கில் கொண்டு, இந்த 60 மாவட்டங்கள் தெரிவு

செய்யப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகளின் பயன்கள் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் வெளிப்படையாகத் தெரியும் என்றும் அவர் சொன்னார்.

PRESIDENT – SYRIA :

சிரியாவிற்கு சென்றுள்ள இந்திய குடியரசுத்தலைவர்
திருமதி பிரதீபா தேவி சிங் பாட்டில் DAMASCUSஇல், அதிபர் BASHAR AL ASSAD உடன் நடத்தும் பேச்சுக்களில், இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு குறித்து முக்கியமாக விவாதிக்கப்படும்..

இந்திய குடியரசுத் தலைவர் சிரியாவிற்கு செல்வது , இதுவே முதன் முறையாகும். தமது பயணத்தின் போது, அவர் இரு நாடுகளுக்கு இடையேயான வட்டார மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் பற்றி விவாதிப்பார்.

திருமதி பிரதீபா தேவி சிங் பாட்டில் 4 நாள் பயணமாக நேற்று சிரியா சென்றடைந்தார். ஐக்கிய அரபு எமிரேட்டுகளில் தமது 5 நாள் பயணத்தை முடித்துக் கொண்டு, Dubaiயிலிருந்து அவர் சிரியாவிற்கு புறப்பட்டுச் சென்றார். இந்திய குடியரசுத்தலைவருடன் பெரியதோர் வர்த்தகக் குழுவும் சென்றுள்ளது .

JAMMU BANDH

ஜம்மு காஷ்மீரில் இன்று மாநில அரசின் பாரபட்சமான கொள்கைகளையும், முதலமைச்சர் திரு ஓமர் அப்துல்லா இந்தியாவுடன் அந்த மாநிலம் இணைந்தது பற்றிப் பேசியதற்கும் கண்டனம் தெரிவிக்கும் வகையில் இன்று காலையில் ஜம்மு நகரில் 3 மணி நேர கதவடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. பாரதிய ஜனதாக் கட்சி இந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது. பந்த் பெரிதும் அமைதியாக நடந்தது என்றும், ஜம்மு நகரின் எப்பகுதியிலும் தகாத சம்பவம் எதுவும் நடந்ததாகத் தகவல் இல்லை என்றும் எமது ஜம்மு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

WILD LIFE:

அழிந்துவரும் அபாயத்தில் உள்ள ராட்சத அணில்களை பாதுகாக்க வனத்துறையும்,, பெங்களூரில் அமைந்துள்ள இந்திய அறிவியல் நிறுவனமும் இணைந்து திட்டம் ஒன்றை வகுத்துள்ளன. இந்த ராட்சத வகை அணில்கள் பூனே அருகில் அமைந்துள்ள பீமாஷங்கர் வனவிலங்குப் புகலிடத்தில் வசிக்கினறன. நாட்டின் 12 ஜோதிலிங்கங்களில் ஒரு லிங்கம் இந்த வனப்பகுதியில் அமைந்துள்ளது என்பது குறிப்படத்தக்கது.

NE MEETING:

மத்திய அமைச்சரவை செயலர் திரு கே.எம். சந்திரசேகர் வடகிழக்கு மாநிலங்களின் தலைமை செயலர்களின் கூட்டத்தை இன்று கூட்டியிருக்கிறார். இந்த ஒரு நாள் கூட்டம் குவஹாத்தியில் நடைபெறும். வட கிழக்கு வட்டாரங்களின் வளர்ச்சிக்காக மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட்ட கட்டமைப்பு திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக இக்கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

ANDHRA CM:

ஆந்திர முதல்வர் திரு கிரண் குமார் ரெட்டி இன்று புது தில்லி வந்துள்ளார். அம்மாநிலத்தின் அமைச்சரவை குறித்து அவர் கட்சி தலைவர் திருமதி சோனியா காந்தியுடனும், கட்சியின் பிற மூத்த தலைவர்களுடனும் ஆலோசனை நடத்துவார். வெளிப்படையான நிர்வாகத்திற்கும் மற்றும் சட்டம் ஒழுங்கை பராமாரிக்க திடமான செயல்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் என்று ஏற்கனவே அவர் தெரிவித்திருக்கிறார்.

WIKI LEAKS:

அரசாங்கத்தின் ரகசியக் கோப்புகளை வெளியிடுவதால் பல உயிர்கள் ஆபத்திற்கு உட்படுத்தபடலாம் என்று அமெரிக்க ராணுவத்தின் மூத்த ராணுவ அதிகாரி MIKE MULLEN உண்மைகளை வெளிப்படுத்தும் வலைத்தளமான WIKI LEAKS க்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். WIKI LEAKS அமெரிக்க அரசால் பலருக்கு அனுப்பபட்ட ஆயிரகணக்கான குறிப்பாணைகளை விரைவில் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

TRAINS:

எர்ணாகுளம் - பூணே இடையிலான வாரம் இருமுறை இயங்கும் அதிவிரைவு வண்டியை இன்று காலையில் மத்திய அமைச்சர் இ. முகமது கொடியசைத்து துவக்கி வைத்தார். பாலக்காடில் அமைய உள்ள ரயில் பெட்டி தொழிற்சாலைக்கு நிலம் கையகப்படுத்துவதற்கு கேரள அரசால் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் ரயில்வே நிர்வாகத்தின் ஆய்வில் உள்ளது என்று அவர் கூறினார். மங்களூர் நாகர்கோயில் விரைவு வண்டி தினமும் இயக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

BANGLA GOLD

பங்களாதேஷ் நேற்று முதன்முறையாக ஆசிய விளையாட்டுக்களில் தங்கப்பதக்கம் வென்று வரலாறு படைத்துள்ளது. சீனாவின் குவாங்சு நகரில் பங்களாதேஷ் கிரிக்கெட் அணி நேற்று இறுதிப் போட்டியில் ஆப்கானிஸ்தானை 5 விக்கெட் வித்தியாசத்தில் வென்று இந்தத் தங்கப் பதக்கத்தை வென்றது,

TENNIS

'லண்டனில் உலக டூர் டென்னிஸ் இறுதிச் சுற்றுப் பந்தயங்களில் மகேஷ் பூபதி- மேக்ஸ் மிர்ணயி இணை இருபாலர் பிரிவின் அரையிறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. இது அவர்களின் டென்னிஸ் வரலாற்றில் கிடைத்துள்ள முதல் வாய்ப்பாகும். அவர்கள் இருவரும் வெஸ்லி மூடி- டிக் நார்மன் இணையை 6-4;6-4 என்ற செட் கணக்கில் வென்றனர். மகேஷ் பூபதி - மேக்ஸ் மிர்ணயி இணை லீக் நிலையைத் தாண்டி அரையிறுதிச் சுற்றில் நுழைந்திருப்பது இதுவே முதல் தடவை. இனி அவர்கள் போலந்தின் மரியுஸ் ஃபிரிஸ்ட்டன் பெர்க்- மார்சின் மட்கோவ்ஸ்க் இணையை எதிர்த்து ஆடுவார்கள்.

JAIPAL REDDY – JAGAN

கட்சிக்கு எதிராக ஜெகன் மோகன் ரெட்டி செயல்படுவதாக மத்திய நகர்புற வளர்ச்சி அமைச்சரும், காங்கிரஸ் தலைவருமான திரு ஜெயபால் ரெட்டி குற்றம்சாட்டியுள்ளார். ஜெகன் மோகன் ரெட்டியின் தொலைக்காட்சியான சாக்ஷி டிவியை அவர் கட்சியின் நலனுக்கு எதிராக பயன்படுத்துகிறார் என்று அவர் நிருபர்களிடம் சொன்னார். ஜெகன் மோகன் ரெட்டிக்கி எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற கேள்விக்கு அதை தலைமைதான் முடிவு செய்யும் என்று அவர் சொன்னார். தன்னிடம் கேட்கப்பட்டால் கருத்து தெரிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ASIAN GAMES:

16ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இன்று சீனாவில் குவாங்சு நகரில் நிறைவடைகின்றன. நிறைவு விழாவின் நேர்வர்ணனையை ஆகாசவாணி இன்று மாலை 5.25 முதல் ஒலிபரப்பும். இந்த போட்டிகளில் இந்தியா மொத்தம் 64 பதக்கங்களை வென்றுள்ளது. இவற்றில் 14 தங்கப்பதக்கம்.